சபரகமுவ மாகாணக் கல்வித்திணைக்களம்
வாராந்தப் பாடசாலை

பாடம்: விவசாயமும் உணவுத்தொழினுட்பவியலும்

வாரம்:02

J.Sumaiya-KG/DEHI/ST. Mary's T.M.V

தரம்:10

பகுதி *1*

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. மண்ணின் பௌதிக இயல்பு இல்லாதது
   i. இழையமைப்பு
   ii. மண் ஆழம்
   iii. கட்டமைப்பு
   iv. மண் தாக்கங்கள்

2. மண் கட்டமைப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது
   i. உலகில் 12 வகை மண் கட்டமைப்புகள் காணப்படுகின்றன.
   ii. இலங்கையில் 4 வகை மண் கட்டமைப்புகளே காணப்படுகின்றன.
   iii. இவற்றுள் சிறுமணியுருவான கட்டமைப்புகளே அதிகமாக காணப்படும்
   iv. பயிர்ச்செய்கைக்கு உகந்தது தனிமணியுருவான கட்டமைப்புகளாகும்

3. மண்ணின் நிறத்தை தீர்மானிக்க உதவும் அட்டவணை
   I. Monsel நிற அட்டவணை
   II. pH நிற அட்டவணை
   III. இல நிற அட்டவணை
   IV. உணவு நிற அட்டவணை

4. மண்ணின் நிறத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணி ஒன்றல்லாதது
   I. கனிப்பொருட்கள்
   II. சேதனப் பொருள்
   III. மண் கட்டமைப்பு
   IV. நீர் வடிப்பு

5. மண் கரைசலின் ....................................அயன்களை விட .................அயன்கள் அதிகரிக்கும் போது மண்ணின் அமிலத்தன்மை அதிகரிக்கும். மேற்படி இடைவெளிகளுக்கு பொருத்தமானது
   I. $OH^-$ , $H^+$
   II. $H^+$, $OH^-$
   III. $H^+$,$Al^{3+}$
   IV. $Al^{3+}$, $H^+$

6. நடுநிலை மண்ணின் pH பெறுமானம்
   i. 7.3 – 8.3
   ii. 6.6-7.2
   iii. 4.5 - 6.5
   iv. 3 - 4.5

7. கீழ் வரும் கூற்றுக்களை அவதானித்து வினாக்களுக்கு விடையளிக்க.

A. மண்ணுக்கு கந்தகம் கலத்தல்

B. மண்ணுக்கு சேதனப் பொருட்கள் சேர்த்தல்

C. மண்ணுக்கு தொலமைற்று சேர்த்தல்

மண்ணின் காரத்தன்மையை நீக்க பொருத்தமான செயன்முறை

i. A
ii. B
iii. A , B
iv. A , C

8. மண்ணின் அமிலத்தன்மையை நீக்க பொருத்தமான இரசாயன சேர்வை

i. $Na_2Co_3$
ii. $CaCO_3$
iii. $NaHCo_3$
iv. கந்தகம்

9. இலங்கையில் உள்ள மண் வகைகளின் கீழ்வரும் இயல்புகளில் சரியானது

i. செம்மஞ்சட் பொட்சோல் மண் ஓரளவு காரத்தன்மை கொண்டதாக காணப்படும்.
ii. அலுவியல் மண் கடற்கரையைஅண்டிய பிரதேசங்களில் காணப்படும்.
iii. செங்கபில மண் அதிகளவில் உலர் வலையப் பிரதேசங் களில் காணப்படும்
iv. கற்றயன் பரிமாற்றக்கொள்ளளவு அலுவியல் மண்ணில் அதிகம்

10. சேர்கின்ற நீர் நிலத்தின் பள்ளமான பகுதிகளை நோக்கிச் செல்லும் போது ஏற்படுகின்ற மண் அரிப்பு

I. சிதறலரிமானம்
II. பரப்பரிமானம்
III. ஓடுகால் அரிமானம்
IV. நீரரிபள்ள அரிமானம்

பகுதி 2

1. மண்ணை மீளவளமாக்கல் என்றால் என்ன?
2. மண்ணரிப்பை குறைக்கும் பிரதான இரண்டு முறைகளை குறிப்பிட்டு ஒவ்வொன்றையும் விளக்குக.
3. மண்ணின் கூறுகளை பெயரிட்டு பயிர்ச்செய்கைக்கான அவற்றின் முக்கியத்துவங்களை விபரிக்க.
4. களத்தில் மண் கட்டமைப்பைத் துணியும் விதத்தை விளக்குக
5. மண்ணீர் நிலவும் விதங்களை பெயரிட்டு விபரிக்க.